# கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------

01. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 25 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஆகஸ்ட் 08 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் ஆரம்பம் முதல் முன்னைய வருட இறுதி வரையில் நிதிக் கூற்றுக்கள் 2010 ஆண்டின் போது உள்ளூராட்சி மீதான இலங்கை நிறுவனத்தினால் மீண்டும் தயாரிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதிகள் வித்தியாசமடைந்துள்ளன. வித்தியாசமான ரூபா 42,149,835 தொகையாக காணப்பட்டதுடன் அதற்காக நாட்குறிப்பு மூலம் கணக்குகள் மீதான தாக்கத்தினை சரிசெய்யாமல் திருத்திய மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி என காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முறையே ரூபா 670,828 மற்றும் ரூபா 39,813 ஆகிய ஆதன மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெவ்வேறாக பேணப்பட வேண்டிய முத்திரைக் கட்டண பெறுவனவுகள் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணம் பெறுவனவுகள் ஒரே கணக்கில் பேணப்பட்டுள்ளது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ஏற்பாடு செய்திருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக ஒதுக்கியிருந்த ரூபா 60,000 கணக்காய்வுக் கட்டணம், வட்டி பங்கிலாபம் மற்றும் பணிக்கொடை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக செலுத்த வேண்டிய மொத்தக் கணக்காய்வுக் கட்டணம் கடன்கொடுத்தோர் பதிவேட்டில் பதியப்படல் கைவிடப்பட்டுள்ளது.

(உ) தளபாடங்கள் மற்றும் உபகரங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 4,400 பெறுமதியான இரண்டு கணிகருவிகள் மற்றும் ரூபா 2,720 பெறுமதியான மூன்று வகை நுகர்வுப் பண்டங்கள் பிழையாக பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) இரண்டு வங்கிகளுடன் தொடர்புடைய ரூபா 3,360 இற்கான காசோலை புத்தகக் கட்டண மீளாய்வாண்டிற்கான செலவுகள் என காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) வேறு வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 17,452 இற்கான நீர் பவுஸரின் காப்புறுதி பெறுவனவு பிழையாக முத்திரை கட்டண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

(ஏ) 2008 மற்றும் 2009 ஆண்டுகள் தொடர்பாக ஆதனக் கடனுக்காக கிடைத்த ரூபா 117,304 இற்கான அரச பங்களிப்பு நாட்குறிப்பு 7 இன் மூலம் நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 12 விடயங்களை கணக்குகளில் காட்டப்படும் பெறுமதியும் அதனோடு தொடர்புடைய பட்டோலைக்குமிடையே காட்டப்படும் பெறுமதிகளுக்கிடையே ரூபா 12,453,311 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

09 கணக்கு விடயங்களைச் சேர்ந்த ரூபா 36,464,671 பெறுமதியான மீதிகளுக்காக கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், உளமை உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், காலப்பகுப்பாய்வு என்பன காணப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு ஏற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.4 இணக்கமின்மைகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 145 | ஒவ்வொரு வைப்பு வகையிலும் காணப்படும் வைப்புப் பற்றிய விவரமான அறிக்கையொன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளை செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நி.பி. 396(ஈ) | 06 மாத காலத்தை கடந்துள்ள வழங்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 10,729 இற்கான 04 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | இலக்கம் 08/2005 மற்றும் 2005 மார்ச் 31 திகதி பொது நிருவாக சுற்று நிருபம் | ஆதனக் கடனுக்காக அரசாங்க பங்களிப்பு அரசினால் பொறுப்பேற்கப்பட வேண்டும். எனினும் ரூபா 83,533 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,463,749 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 768,568 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானங்கள், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 ரூபா. 000’ | 2009 ரூபா. 000’ | % | % |
| வருமானக் கடன்பட்டோர் | 22,783 | 26,529 | - | 14.12 |
| வீத வரி | 329 | 292 | 12.67 | - |
| ஏக்கர் வரி | 94 | 91 | 3.29 | - |
| நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | 925 | 183 | 405.46 | - |
| வாடகை | 1,724 | 1,198 | 43.90 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 167 | 164 | 1.82 | - |

2.2.2 நிலுவை வரி மற்றும் கட்டணங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 26,119,140 வரி மற்றும் கட்டணம் 1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடை வாடகையின் 50% இனை பதிவழித்தல்

பிரதேச சபை கடை வாடகை அறவீடு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 14 கடைகளுக்காக 2009 ஆண்டிற்காக பெறுமதி மதிப்பீடு செய்திருந்த தொகையில் இருந்து 50% வாடகையினை பதிவழிப்பதற்காக 2010 அக்டோபர் 30 திகதி நடைபெற்ற சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுமதி மதிப்பீடு செய்த தொகையில் இருந்து 50% இனை பதிவழிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு 2010 ஏப்ரல் 12 திகதி விண்ணப்பித்திருந்த போதும் 2011 மே 31 திகதி வரை குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 182 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகையொன்றினை பணத்தின் பெறுமதியற்ற தன்மை அறவீடு செய்வதற்க இயலாமை அல்லது அவர்களின் ஏழ்மை ஆகிய காரணங்களினாலே பதிவழிக்க முடியும். இந்த கடை வாடகை பதிவழித்தல் மேற்கூறிய சந்தர்ப்பங்களுடன் பொருந்தாமையால் கிடைக்க வேண்டிய வருமானத்தை பதிவழித்தல் அந்த பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணானதாகும்.

(இ) 2009 ஜனவரி 01 முதல் 2009 திசெம்பர் 31 திகதியில் 14 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 50% கடை வாடகையில் ரூபா 363,480 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த வாடகை ரூபா 1,079,003 ஆகும்.

2.2.4 விளம்பர அறிவித்தல் மற்றும் தென்படக் கூடிய சுற்றுச்சூழல் கட்டணம் அறவீடு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல்கள் மற்றும் தென்படக் கூடிய சுற்றுச் சூழல் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 பெப்ரவரி 12 திகதி இலக்கம் 1641 கொண்ட வர்த்தமானிகளின் மூலம் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருந்த போதும் 2011 ஆண்டிற்காக 2010 அக்டோபர் 29 திகதி பொதுக் கூட்டத்தில் கட்டணம் விதிக்கப்பட்டிருந்த போதும் 2011 ஜுன் 02 திகதி வரை அக் கட்டணம் விதித்தல் வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மாதிரி ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்ட பகுதி ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிரந்தர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக வருமானப் பரிசோதகருடன் 2011 ஜுன் 02 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 23 நிலைய அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவ் அறிவித்தல்களின் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 22,630 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ் அறிவித்தல்கள் 2010 ஆண்டு முதல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

(இ) விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணங்கள் அறவீடுகளை பதிவு செய்யவதற்காக வருமானப் பதிவேடு பேணப்படாமையால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கட்டண அறவீடு செய்யும் எண்ணிக்கை பற்றி உறுதிப்படுத்த இயலாமல் போனது.

(ஈ) இலக்கம் 1641 வர்த்தமானி மற்றும் 2011 ஆண்டிற்கான திட்டமிட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம் பட்டோலை ஒன்றின் மூலம் பின்வரும் விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணங்கள் விதிக்கப்பட்டிருந்த போதும் அப் பட்டோலைகளின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

* பெரிய அளவிலான பதாதைகள் காட்சிப்படுத்தும் பலகை
* பிடவைகளை பயன்படுத்தி அறிவித்தல்களை காட்சிப்டுத்தல்
* சுவர்கள் அல்லது கட்டடங்களை பயன்படுத்தி அறிவித்தல்கள் காட்சிப்படுத்தல்
* சிறிய காட்சிப்படுத்தும் பலகை

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்

---------------------------------------------

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செலயாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 108,667 தொகைக்காக தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.6 முத்திரைக் கட்டணம்

----------------------------------

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 278,350 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

----------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 | ரூபா. ‘000 |
| ஆளுக்குரிய வேதனம் | 10,869 | 8,092 | 2,777 | 10,597 | 7,910 | 2,687 |
| ஏனையவை | 4,707 | 2,156 | 2,551 | 3,988 | 2,120 | 1,868 |
| உப கூட்டுத் தொகை | 15,576 | 10,248 | 5,328 | 14,585 | 10,030 | 4,555 |
| மூலதன செலவுகள் | 7,577 | 38,386 | (30,809) | 85,345 | 33,588 | 51,757 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 23,153 | 48,634 | (25,481) | 99,930 | 43,618 | 56,312 |

2.4 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01(பதில் செயலாளர்) |
| இரண்டாரம் | 11 | 12 |
| ஆரம்ப | 08 | 10 |
| ஏனையவை(அமைய, தற்காலிக ஒப்பந்த, பிரதியீட்டு) | - | 16 |

(i) மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவுக் கணக்குகளின் பிரகாரம் பதவியணிச் சம்பளக் செலவு ரூபா 8,378,430 எனினும் உள்ளூராட்சி ஆணையாளரினால் ரூபா 6,550,291 மாத்திரம் மீளளிப்புப் செய்திருந்தமையால் சபைக்கு ரூபா 1,828,139 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

(ii) திறைசேரிச் செயலாளரின் 2002 ஜனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 திகதி முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலர்கள் அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் சேர்க்கப்படல் இடை நிறுத்தப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 19 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,347,187 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 முற்கொடுப்பனவுகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்கொடுப்பனவுகளில் ரூபா 28,600 மீதியொன்று காணப்பட்டது.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

சொத்துக்கள் உரித்தாக்கும் போது கம்புறுபிடி பிரதேச சபையில் இருந்து கிடைத்திருந்த ரூபா 79,400 பெறுமதியான குபோட்டா கை டிரக்டர் வண்டியினை பயன்படுத்தாமல் சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்வாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 112,147 ஆகும்.

### 2.6.3 உருப்படி சரிபார்த்தல்

---

மீளாய்வாண்டு தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த உருப்படி சரிபார்த்தல் சபை அறிக்கை தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) காணிகள் மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் பொறித்தொகுதிகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிகள் ஆகியவை தொடர்பாக உருப்படி சரிபார்த்தல் அறிக்கை காணப்படவில்லை.

(ii) 11 பண்ட வகைகளைச் சேர்ந்த 38 அலகுகள் மிகையாகவும், பண்ட வகைள் 28 சேர்ந்த 63 அலகுகள் குறைவாகவும் காணப்பட்டன. இவை தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணிப்பீட்டு சபை விதப்புரையின் முன் நூலகங்களில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு அவற்றை சரிசெய்யும் படி அறிவித்திருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமைக்கான தகவல்கள் காணப்படவில்லை.

* நூலக புத்தகங்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் வழங்குதல் முறையாக நடைபெறாமை
* மீளாய்வாண்டின் போது ரூபா 2,943 பெறுமதியான 49 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் உருப்படி சரிபார்த்தலுக்கு கணிசமான அளவு புத்தகங்களை சமர்ப்பிக்கப்பதற்காக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு முடியாதுள்ளமை.
* நூலகத்தை நடவத்துவதற்கு பொருத்தமான கட்டிடம் ஒன்று காணப்படாமை
* புத்தகங்களை கட்டுவதற்கு தேவையான உபகரணங்கள் காணப்பட்ட போதும் புத்தகங்கள் கட்டப்படாமையால் அவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.
* வாசகர்கள் எடுத்துச் சென்று திருப்பி ஒப்படைக்காத புத்தகங்களைத் திருப்பி எடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்காமை.

2.7 செயற்பாட்டுத் திறமையின்மை

---

2.7.1 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய பணம்

---

பிரதேச சபையினால் அறவிடப்பட்டுள்ள ரூபா 217,801 இற்கான பெறுமதி கூட்டிய வரி மற்றும் ரூபா 7,562 முத்திரை வரி என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும் ஜூன் 01 திகதிய கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரை ரூபா 225,363 தொகையொன்று அனுப்பப்படாமல் காணப்பட்டது.

2.7.2 வீதி விளக்குகள் பராமரிப்பு மற்றும் நிருவாகம்

---

வீதி விளக்குகள் பராமரிப்பு மற்றும் நிருவாகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) வீதி விளக்குகள் பராமரிப்புக்காக மின் துணைக் கருவிகள் கொள்வனவு செய்யும் போது தேவைக்கு ஏற்ற விதமாக பராமரிப்பு மின் தொழிலாளரின் விண்ணப்பம் மற்றும்

அதற்கான தொழில்நுட்பவியலாளரின் அங்கீகாரத்தின் மீது அவை கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவ்வாறான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள இடங்கள் பற்றி ஒட்டு மொத்த வரைவு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. உத்தரவாத காலத்துடன் மின்விளக்குகள் கொள்வனவு செய்து வீதி விளக்குகளில் பொருத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படும் வீதி விளக்குகள் ஒவ்வொன்றை வெவ்வேறாக இனங்காண்பதற்கு ஏற்ற வகையில் குறியீட்டு முறைமையொன்று பயன்படுத்தியிருக்கவில்லை.

(iv) 2011 ஜுன் 02 கணக்காய்வுத் திகதி வரை மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீதி விளக்குகள் தவிர மேலதிகமாக 696 விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது.

(v) 2010 ஆண்டின் போது வீதி விளக்குகள் பொருத்துவதற்கான துணை கருவிகளுக்காக ரூபா 264,520 தொகையும் பராமரிப்பாளருக்கு ரூபா 90,350 வும் ஆக மொத்தம் ரூபா 354,870 தொகையொன்று சபையினால் செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 12,960 தொகையொன்று மாத்திரம் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.7.3 வீடுசார் சேதனப் பசளை கொள்கலன்கள் செயற்திட்டம்

---

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் வீடுசார் சேதனப் பசளை கொள்கலன்கள் வினியோகிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 150 கொள்கலன்கள் வினியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டு 2007 மற்றும் 2008 ஆண்டுகளின் போது 100 கொல்கலன்கள் ரூபா 250,000 விற்கு கொள்வனவு செய்து வினியோகிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 60,000 செலவில் கொள்வனவு செய்திருந்த 50 கொள்கலன்களில் ரூபா 28,800 பெறுதியான 24 கொள்கலன்கள் 2011 ஜுன் 02 திகதி வரையும் வினியோகிக்கப்படாமல் சபையின் சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

2.8 ஒப்பந்த நிருவாகம்

---

கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் நூலகம் நிர்மாணித்தல் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் (மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம்)

---

சபையின் நூலகத்தை நிர்மாணிப்பதற்காக முதலாம் கட்டத்திற்காக ரூபா 2,832,694 பெறுமதியான மதிப்பீடு ஒன்றும், இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 1,100,000 பெறுமதியான மதிப்பீடு ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்தன. முதலாம் கட்ட மதிப்பீட்டுக்காக 2007 நவம்பர் 26 திகதி கிரிந்த மகின இஹல தெற்கு விவசாய அமைப்புடன் ரூபா 1,997,049 பெறுமதியான உடன்படிக்கை ஒன்றும், இரண்டாம் கட்டத்திற்காக அதே விவசாய அமைப்புடன் 2010 திசெம்பர் 02 திகதி ரூபா 1,060,701 பெறுமதியான உடன்படிக்கை ஒன்றும் கையொப்பமிடப்பட்டு 2010 ஜுன் 21 திகதி முதலாம் கட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதிக்காக ரூபா 1,715,919 தொகையொன்று செலுத்தியிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) 07 விடயங்களுக்காக உடன்பட்ட தொகையை விட மிகையாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டதென ரூபா 333,173 தொகையொன்று மிகையாக செலுத்தியிருந்த போதும் குறிப்பிட்ட மேலதிக கொடுப்பனவுக்காக கேள்வி சபையின் மற்றும் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ii) உடன்பட்ட பட்டோலையின் இலக்கம் சீ-31 என விடயமொன்று குறிப்பிட்டிருக்கவில்லை எனவும் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அவ் விடயத்தின் கீழ் தூண்களின் இணைப்பு உத்தரம் மற்றும் உத்தரத்திற்காக மி.மீ. 6 அளவில் கம்பிகளை வளைத்து கட்டுவதற்காக கி.கி. 274.45 இற்காக ரூபா 31,287 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் நிர்மாண வேலை 4 மாதங்களில் அதாவது 2008 மார்ச் 26 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒப்பந்தக்காரின் தொழிலாளர் பற்றாக்குறை, மிகை மழை, கற்கள், மண் ஆகிய கட்டுமான பொருட்கள் பெற்றுகொள்ள முடியாமை ஆகிய காரணங்களை காட்டி ஒப்பந்த வேலை காலத்தை ஒரு வருடம் வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் இந்த விண்ணப்பக் கடிதங்களில் சபையின் தின பதிவு முத்திரை பதிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கால நீடிப்பு விதந்துரைக்ககப்பட்ட கடிதங்கள் தொழில்நுட்ப சேவை பெண் உத்தியோகத்தரினால் மற்றும் அங்கீகரித்த தலைவர் நாள் குறிப்பிட்டு கையொப்பமிட்டிருக்காமையால் இந்த விண்ணப்பக் கடிதங்களை முறையான தன்மை ஒன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iv) கட்டிடத்தின் மேல் மாடியினை நிர்மாணிப்பதற்கான மீதியாக வைக்கப்பட்டிருந்த கம்பிகள் துருப்பிடித்து காணப்பட்டது.

(v) 2010 திசெம்பர் 02 திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை இலக்கம் 03 இன் நிபந்தனைகளின் பிரகாரம் நிர்மாண வேலை 2011 மார்ச் 02 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒப்பந்தக்காரர் கால நீடிப்பிற்கு விண்ணப்பித்திருக்கவில்லை. அத்துடன் விடய இலக்கம் 0.6 இல் 1.2 இன் பிரகாரம் சீமெந்துக் கலவையினால் 12''x12'' அளவிலான டயில் பதிப்புதல், விடய இலக்கம் 07 இன் மி.மீ. 5 கனமான கண்ணாடிகள் பொருத்தி ஜீ சட்டத்தினால் அலுமினிய மறைப்புக்கள் ஆகிய விடயங்கள் 2011 ஜூன் 02 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் தாமத வாரங்கள் 10 இற்கான ரூபா 18,560 தாமதக் தண்டம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(vi) இந்த நிர்மாண வேலைக்காக இரண்டு கட்டங்களின் கீழ் 2007 மற்றும் 2010 ஆண்டுகளின் போது ரூபா 3,057,750 பெறுமதியான இரண்டு உன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு 2011 ஜூன் 02 திகதி வரை ரூபா 1,715,919 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதும் நிர்மாண வேலை இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் கட்டிடத்தை நூலகம் ஒன்றாக பொது மக்களுக்கு பயன்படுத்த முடியாதுள்ளது.

(vii) மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் செயற்படும் நூலகக் கட்டிடத்திற்காக ரூபா 3,057,750 இற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு ரூபா 1,715,919 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் 2011 ஜூன் 02 திகதி வரை ரூபா 1,454,647 தொகையான ஏற்பாடுகள் மாத்திரமே கிடைத்திருந்தமையால் நிலுவை ஏற்பாட்டுத் தொகை ரூபா 1,603,103 ஆகும்.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) செலவுக் கட்டுப்பாடு